செ.வெ.எண்.18 நாள்.08.11.2017.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொக துப்புரவு பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.11.2017) அதிகாலையில் வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். கொசு புழுக்கள் கண்டறியப்பட்ட வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், நடுவக்குறிச்சி ஊராட்சி,

இந்திராநகர், நடுவக்குறிச்சி ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை ஆய்வு செய்தார். இப்பகுதியில், கொசு ஒழிப்பு பணிகளுக்கு கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும், வடிகால்களை தூர் வாரவும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணியாளர்களிடம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிகளை மிகுந்த கவனத்துடன் சிறப்பாக பணியாற்ற வேண்டுமெனவும், டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். நடுவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய பள்ளி மாணவிகளுக்கு டெங்கு விழிப்புணர்வு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எடுத்துரைத்தார். மேலும், பள்ளிக்கு முன்பு உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றவும் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், வட்டாட்சியர் திரு.தங்கராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சண்முகத்தாய், திருமதி.ஆறுமுககனி, வட்டார மருத்துவ அலுவலர் திரு.ஜஸ்டின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.